**சார்பு நீதிமன்றம், செஞ்சி**

**அ.வ.எண்.339/2023** **நாள்.10.12.2024**

2024-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 10-ம் நாள் வாதி தரப்பு **1ம்** சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிலம்பரசன் | தொழில் | |
| த.பெ/க.பெ. | அரிராமன் | சாதி | |
| கிராமம் | வளத்தி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 31 |

**வா.சா.1**
**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பில் **1-ம்** சாட்சி ஆவேன். நான் வா.**சா.1** ஆக இருந்து எனது தரப்பு எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தினை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் கூறப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு, நான் படித்துப்பார்த்து, படிக்க கேட்டு சரி என ஒப்புக்கொண்டு, கையொப்பம் செய்தேன் என ஒப்புக்கொள்கிறேன். எழுத்து மூலமான முதன்மை பிரமாண வாக்குமூலத்தை எனது தரப்பு வாய்மொழி சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**ஆவணங்கள்**

1. வா.த.சா.1 - வாதி வங்கிக்கு 1ஆம் பிரதிவாதி விவசாய கடன் கேட்டு கொடுத்த மனு அசல்.
2. வா.த.சா.2 03.12.2010ல் வாதியின் வங்கிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த தாவா புரோநோட்டு அசல்
3. வா.த.சா.3 03.12.2010ல் வாதியின் வங்கிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் ஒப்பந்தம் (Loan Agreement) அசல்.
4. வா.த.சா.4 03.12.2010ல் வாதியின் வங்கிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த தொடர்ச்சி கடிதம் (Letter of continuity) அசல்
5. வா.த.சா.5 03.12.2010ல் வாதியின் வங்கிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த பொறுப்புணர்வு கடிதம். (undertaking letter) அசல்
6. வா.த.சா.6 03.12.2010ல் வாதியின் வங்கிக்கு 2ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த காப்புறுதிக் கடிதம் (Letter of Guarantee) அசல்
7. வா.த.சா.7 14.03.2012ல் வாதியின் வங்கிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் ஒப்புகை (Acknowlegment of Debt) கடிதம் அசல்

8. வா.த.சா.8 14.12.2014ல் வாதியின் வங்கிக்கு 1,2 பிரதிவாதிகள் சேர்ந்து எழுதிக்கொடுத்த கடன் ஒப்புகை கடிதம் (Acknowlegment of Debt) அசல்
9. வா.த.சா.9 12.10.2017ல் வாதியின் வங்கிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் ஒப்புகை கடிதம் (Acknowlegment of Debt) அசல்
10. வா.த.சா.10 21.03.2019ல் வாதியின் வங்கிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் ஒப்புகை கடிதம் (Acknowlegment of Debt) அசல்
11. வா.த.சா.11 21.05.2019ஆம் தேதி வாதியின் வங்கி சார்பில் பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் கொடுத்த அறிவிப்பு நகல்
12. வா.த.சா.12 மேற்படி அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்ட அஞ்சல் ஒப்புகை அட்டை
13. வா.த.சா.13 18.09.2021ல் வாதியின் வங்கிக்கு 1ஆம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் ஒப்புகை கடிதம் (Acknowlegment of Debt) அசல்
14. வா.த.சா.14 1ம் பிரதிவாதியின் Statement of Accounts கணினி நகல்

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று தாவாப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).

(குறுக்கு விசாரணை இல்லை)